நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர் –
628215
நாள்: 20.06.2023

சாதாரணக்கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 27.06.2023 ம் தேதி, செவ்வாய் கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

பொருள் எண். 01

திருச்செந்தூர் நகராட்சியில் பொதுநிதி திட்டம் 2022–2023–ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ. எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	திரு. மாடசாமி ஒப்பந்தகாரர், சாத்தான்குளம்	திரு. திவாகர் சாம் ஒப்பந்தகாரர், முதலூர்
1.	திருச்செந்தூர் நகராட்சி எல்லை பகுதிகளில் மூன்று இடங்களில் பெயர் பலகை அமைப்பதற்கு	4.75	**மதிப்பீடு ரேட்டை விட 0.19% கூடுதல்**	**மதிப்பீடு ரேட்டை விட 0.04% குறைவு**

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்
2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. திவாகர் சாம், முதலூர்** என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 334

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 02

திருச்செந்தூர் நகராட்சியில் பொதுநிதி திட்டம் 2022–2023–ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ. எண்.	**பணி விபரம்**	**மதிப்பீடு (லட்சத்தில்)**	**திரு. மாடசாமி ஒப்பந்தகாரர், தெற்கு இளமால்குளம்**	**திரு. திவாகர் சாம் ஒப்பந்தகாரர், முதலூர்**
1.	திருச்செந்தூர் நகராட்சிக்கு பயன்படுத்தப்படும் குடிநீர் உதிரி சாமான்கள் பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு நகராட்சி அலுவலக வளாகத்தில், அலுவலகப் பின்புறத்தில் குடிநீர் உதிரி சாமான்கள் வைப்பதற்கு பாதுகாப்பு செட் அமைப்பதற்கு.	4.90	**மதிப்பீடு ரேட்டை விட 10.22% கூடுதல்**	**மதிப்பீடு ரேட்டை விட 0.23% குறைவு**
2.	திருச்செந்தூர் நகராட்சிக்கு பயன்படுத்தப்படும் மின் பொருட்கள் மற்றும் பொது சுகாதார பொருட்கள் பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு நகராட்சி அலுவலக வளாகத்தில், அலுவலகப் பின்புறத்தில் மின் பொருட்கள் மற்றும் பொதுசுகாதார பொருட்கள் வைப்பதற்கு பாதுகாப்பு செட் அமைப்பதற்கு.	4.90	**மதிப்பீடு ரேட்டை விட 7.22% கூடுதல்**	**மதிப்பீடு ரேட்டை விட 0.23% குறைவு**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அங்கீகரிக்கலாம்
2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. திவாகர் சாம், முதலூர்** என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 335

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 03

அரசாணை நிலை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள். 13.02.2023ன் படி, திருச்செந்தூர் நகராட்சியில் பாதாளசாக்கடை வீட்டு இணைப்பு வழங்கும் பணிக்கு மாநில நகர்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ. 270.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டதனடிப்படையில், மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு பொதுமக்கள் அறிந்திடும் வகையில் 09.03.2023 ம் தேதி அன்று முரசொலி, டெக்கான் குரோனிக் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகிய செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான **பட்டியல் தொகை ரூ. 79695/- ஸ்ரெஸ்டா கம்யூனிகேசன்** நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு..

அலுவலக குறிப்பு :

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 336

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 04

திருச்செந்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை ஓராண்டு வெற்றி விழா / இரண்டாம் ஆண்டு தொடக்க விழா விளம்பரம், திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி 100 கிலோவிற்கு அதிகமாக அளவுள்ள கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்வது தொடர்பான அறிவிப்பு மற்றும் திருச்செந்தூர் நகராட்சி எல்லைக்குள் கழிவு நீர் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களின் உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடம் பதிவு செய்திட வழங்கப்பட்ட பொது அறிவிப்பு ஆகியவற்றினை தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டதற்கான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ள விபரப்படி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

வ. எ.	விபரம்	நாள்	தொகை
1.	திடக்கழிவு மேலாண்மை ஓராண்டு வெற்றி விழா / இரண்டாம் ஆண்டு தொடக்க விழா விளம்பரம்	03.06.2023	23688/-
2.	திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி 100 கிலோவிற்கு அதிகமாக அளவுள்ள கழிவுகளை உருவாக்குபவர்கள் நகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்வது தொடர்பான அறிவிப்பு	03.06.2023	23688/-
3.	திருச்செந்தூர் நகராட்சி எல்லைக்குள் கழிவு நீர்	06.06.20	23688/-

	கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களின் உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களை வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடம் பதிவு செய்திட வழங்கப்பட்ட பொது அறிவிப்பு	23	

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 337

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 05</u>

அரசாணை (நிலை) எண். 10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை நாள். 23.01.2023ன் படி திருச்செந்தூர் நகராட்சியில் புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவுகளில் உள்ள பணியாளர்கள் அலுவலக பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, பொதுப்பிரிவில் இரண்டு எண்ணம் கணினி மற்றும் பிரிண்டர்கள், பொதுசுகாதாரப் பிரிவில் ஒரு எண்ணம் கணினி மற்றும் பிரிண்டர் வாங்கி வழங்கிடுமாறு கோரியுள்ள விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக நலனை கருத்திற் கொண்டு 3 எண்ணம் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்வதற்கும் அதற்குரிய செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண். 1504/2022/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 338

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 06</u>

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் காணொலி ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்கவும் திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு / வணிக கட்டிடங்களுக்கு இந்நகராட்சி மூலமாக பாதாளசாக்கடை இணைப்பு விடுதலின்றி வழங்கப்படும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாகனங்களில் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ. 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 339

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 7</u>

திருச்செந்தூர் நகராட்சியில் அம்ரூட் 2.0 2022–2023–ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ. எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	திரு. ரஞ்சித்குமார், ஒப்பந்தகாரர், தோப்பூர்	திரு. ஆதிவேல் ஒப்பந்தகாரர், ஏரல்
1.	திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட தோப்பூர் சர்வே எண். 111A ல் பசுமையான இடங்கள் / பூங்காக்களை மேம்பாடு செய்வதற்கு	35.00	**மதிப்பீடு ரேட்டை விட 0.10% குறைவு**	**மதிப்பீடு ரேட்டை விட 1 . 66% கூடுதல்**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அங்கீகரிக்கலாம்
2. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. ரஞ்சித்குமார்** என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 340

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 8</u>

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி பொதுமக்களின் நலன் கருதி பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்திட நகராட்சி நீர்த்தேக்க தொட்டிகள் அனைத்தையும் சுத்தம் செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் ஈடு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 341

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 09

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 29404/2022/SS2, நாள். 13.04.2023ன் படி மூலதன மானிய நிதி திட்டம் 2022–23ன் கீழ் திருச்செந்தூர் நகராட்சி, மாட்டுத்தாவணி பகுதியில் புதிதாக 2.20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த் தேக்க தொட்டி கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு வடிவமைப்பு வரைபடம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்த வகைக்கு Glency Docmra Consultants India Pvt. Ltd., Chennai நிறுவனத்திற்கு மதிப்பீட்டு தொகையில் 1% மற்றும் 18% GST உட்பட தொகை ரூ. 2,64,320/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 342

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 10

திருச்செந்தூர் நகராட்சி 24வது வார்டுக்குட்பட்ட கந்தசாமிபுரம் மற்றும் கணேசபுரம் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் மக்களுக்கு வார்டு 25, ஆலந்தலையில் உள்ள நியாயவிலைக் கடை மூலம் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பெருவாரியாக வீடுகளில் உள்ள பெண்கள் மட்டுமே ரேசன் கடைக்கு பொருள்கள் வாங்க செல்வதால் ஆலந்தலைக்கு 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு காட்டு பாதையில் பயணம் செய்வது சிரமமாக உள்ளது. மேலும் ஆலந்தலை பகுதியில் மொத்தமாக 1200 கார்டுகள் உள்ளதால் சிரமபட்டு பயணம் செய்தும், பொருட்கள் தீர்ந்து விடுகிறபடியால் வாங்க முடியாமல் மற்றொரு நாள் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் 240 எண்ணம் கார்டுகள் கொண்ட கந்தசாமிபுரம் மற்றும் கணேசபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு பொதுவான இடத்தில் கடை அமைக்க இயலாத காலணத்தால் மாதம் ஒருமுறை நடமாடும் வாகனம் (Mobile Service) மூலம் நியாயவிலைப் பொருட்களை விநியோகம் செய்வதற்கான செலவுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 343

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 11

அரசாணை(நிலை) எண். 116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021ன் படி திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் உள்ள தட்டச்சு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு இரண்டு எண்ணம் கணினி இயக்கும் பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண். K3/860695/2023, நாள். 26.05.2023ன் படி அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 89 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.45 இலட்சத்திற்கான செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 344

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 12

திருச்செந்தூர் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு 20.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 23 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளும், 4.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 எண்ணம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியும் உள்ளது. இதனை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குறிப்பிட்ட நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்திட போதுமான பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்களின் நலன் கருதியும், குடிநீர் பணியின் அவசியம் கருதியும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பயன்படுத்தி குடிநீர் விநியோகப் பணிகளை சீரான முறையில் மேற்கொள்வதற்கு ஏதுவாக 7 எண்ணம் பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். K3/860695/2023, நாள். 26.05.2023ன் படி அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 89 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 4.90 இலட்சத்திற்கான செலவினங்களை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண். 345

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 13

குரங்கனி மற்றும் கானம் பகுதிகளிலிருந்து திருச்செந்தூர் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களை 24 மணி நேரமும் இயக்க வேண்டிய நிலை இருப்பதால், மின் மோட்டார்களை இயக்குவதற்கு 6 எண்ணம் பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். K3/860695/2023, நாள். 26.05.2023ன் படி அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 89 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 4.20

இலட்சத்திற்கான செலவினங்களை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண். 346

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 14</u>

திருச்செந்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் 18.501கி.மீ. நிளத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது. இதில் 676 ஆளிறங்கு குழிகள் (Man Holes) அமைக்கப்பட்டுள்ளது. மாட்டுத்தாவணி பகுதியில் 1 துணை கழிவுநீர் அகற்றுதல் நிலையமும், தோப்பூர் பகுதியில் 1 முதன்மை கழிவு நீர் நிலையமும் உள்ளது. இதன் மூலம் தற்போது 1. 9 MLD கொள்ளளவு கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு விவசாய பணிக்காக எல்லப்பன்நாயக்கன் குளம் மறுகால் ஓடையில் விடப்பட்டு வருகிறது.

. இந்நிலையில் மாநில நகர்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் பாதாளசாக்கடை வீட்டு இணைப்பு வழங்கும் பணியினை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே மேற்படி துணை கழிவுநீர் அகற்றுதல் நிலையம் மற்றும் தோப்பூர் பகுதியில் உள்ள முதன்மை கழிவு நீர் அகற்றும் நிலையத்திலிருந்து கழிவு நீரினை அகற்றுவதற்கு மின் மோட்டார்களை 24 மணி நேரமும் இயக்க வேண்டிய நிலை உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பயன்படுத்தி பாதாளசாக்கடைப் பணிகளை சீரான முறையில் மேற்கொள்வதற்கு ஏதுவாக 5 எண்ணம் பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். K3/860695/2023, நாள். 26.05.2023ன் படி அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 89 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கான செலவினங்களை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண். 347

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 15</u>

திருச்செந்தூர் நகராட்சியில் அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டு வரப்படுகிறது. மேலும் அனைத்து பணியாளர்களுக்கும் கணிப்பொறி வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் கணினி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. நகராட்சியில் ஜெனரேட்டர் வசதி இல்லாததால் மின் தடை ஏற்படும்பொழுது அலுவலக பணிகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேலும் மின் தடை ஏற்படும்பொழுது அலுவலக பணிக்கான கணிப்பொறிகளில் பழுது ஏற்பட்டு விடுவதால் தொடர்ந்து கணினியினை பயன்படுத்திட முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே மின் தடை ஏற்படும்பொழுது அலுவலகப் பணிகள் பாதிக்கப்படாதவாறும்,

கணிப்பொறிகளை பாதுகாத்திடும் பொருட்டும் அலுவலக பயன்பாட்டிற்கு 10KV திறனுள்ள UPS வாங்குவதற்கும், அதற்கான மின் பணிகள் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 700000/- இலட்சத்திற்கு அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண். 348

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 16</u>

திருச்செந்தூர் நகராட்சியில் திட்டப்பணிகளுக்கு (பாதாளசாக்கடை வீட்டு இணைப்பு திட்டம், தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைத்தல், தோப்பூரில் பசுமையான இடங்கள் / பூங்காக்களை மேம்பாடு செய்தல் பணி, மூலதன மானிய நிதி திட்டம் 2022-23 - நந்தகுமாரபுரம் பகுதியில் புதிதாக 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டிஅமைத்தல் பணி, 15வது நிதிக்குழு மானியம் திட்டப் பணிகள், CMBFS - 2022- 23 திட்டத்தின் கீழ் காலை உணவு வழங்கிடசமையற் கூடம் கட்டுதல் பணி) மதிப்பீடுகள் தயாரித்தும், சாலைகள் மற்றும் பணிகள் நடைபெறும் இடங்களை புகைப்படம் எடுத்து, அதனை கலர் பிரிண்ட் செய்து திட்டப் பிரேரணை தயாரித்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறும் வகைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டதற்கான செலவினம் ரூ. 73,000/- த்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண். 349

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். *17*</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுரையின் படி, உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தமிழக அரசின் இரண்டாண்டு கால வளர்ச்சிப்பணிகளை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் விதமாக நகராட்சிக்குட்பட்ட 15 இடங்களில் டிஜிட்டல் பிளக்ஸ் பேனர் வைப்பதற்கு தொகை ரூ.52,500/-யை (வரிகள் நீங்கலாக) நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண். 350

தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர் –
628215
நாள்: 27.06.2023

அவசரக் கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் **சாதாரணக் கூட்டம்** 27.06.2023 **தேதி** செவ்வாய் கிழமை, முற்பகல் 11.00 **மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து** தலைவர் **அவர்கள் தலைமையில் நடைபெற்ற** கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருளின் அடிப்படையில் மதியம் 1.00 மணிக்கு கூடுதல் மன்றப் பொருள் வைத்து சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

<u>பொருள் எண். 1</u>

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண். 268/2A1, 268/6, 268/7, 268/9 பரப்பளவு 1.98.50 ஹெக்டர் பரப்பில் அமையவிருக்கும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வேண்டி செல்வி. சொ. பா. கிருஷ்ண பிரியா, த/பெ. ஆ. சொர்ண பாண்டியன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண். 351

தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 2</u>

திருச்செந்தூர் நகராட்சி மூலதன நிதி மானிய திட்டம் 2020 – 21 திட்டத்தின் கீழ் தினசரி சந்தை கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடமானது தரமற்ற முறையில் கட்டப்பட்டு வருவதாக நகர்மன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதின் காரணமாக மேற்படி கட்டிடத்தின் தரத்தினை ஆய்வு செய்த பின்னர் பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண். 352

தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்

திருச்செந்தூர் நகராட்சி